நற்செய்தியிலும் இயேசு தம் சீடர்களை அவர்களின் நம்பிக்கையில் திடப்படுத்தி, கடவுளின் அரசில் தங்களுடைய செல்வத்தை வைக்குமாறு வலியுறுத்துகிறார். அங்கு அவர்களுக்குக் காத்திருக்கும் செல்வத்தை எதுவும் அழிக்கமுடியாது. மேலும் அவர்கள் எந்த நேரத்திலும் கணக்குக் கேட்கப்படலாம் என்றும் நல்ல பணியாளனைப் போல தலைவர் எந்த நேரத்தில் வந்தாலும் அவரை வரவேற்க எப்போதும் தயாராய் இருக்கும் நல்ல பணியாளனைப் போல இருக்கவேண்டும் என்று அவர்களுக்கு நினைவூட்டுகிறார்.

“உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்”

இந்த வார்த்தைகள் ஒரு ஆழமான அர்த்தத்தைக் கொண்டுள்ளன; மேலும் நம் வாழ்க்கையின் சலசலப்பில் நம் உள்ளங்கள் எதைச் சார்ந்துள்ளது? நம் எண்ணங்கள், ஆற்றல்கள் மற்றும் ஆசைகளை எவை ஆக்கிரமித்துள்ளன? நாம் மதிப்பளிக்கும் விஷயங்கள் நம் உள்ளங்களில் இருப்பதை வெளிப்படுத்துகின்றன. மேலும் நாம் விரும்பும் அனைத்திற்கும் செயல்பட நாம் எப்போதும் தயாராய் இருக்கிறோம்.

அதனால் தான் கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம் நமது உள்ளங்களை ஆய்ந்தறிவது மிகவும் முக்கியம். நமக்கு உண்மையிலேயே முக்கியமானது என்ன என்பதைக் குறித்து நாம் தெளிவாக இருக்கும்போது தான், நாம் முழுமனதுடன் நற்செய்தியை அறிவிக்க முடியும். நம் உள்ளங்கள் தற்காலிகமான விஷயங்களால் கவரப்பட்டால், விண்ணகத்தில் நமக்காகக் காத்திருக்கும் செல்வங்களை மறந்து, இந்த உலகிலும் நமக்கானப் பணியை மறந்துவிடுகிறோம். ஆனால் நமது உள்ளங்கள் கடவுளின் வாக்குறுதியிலும் அவருடைய உண்மையிலும் நங்கூரமிட்டிருந்தால், நேர்மையுடனும் உறுதியுடனும் நற்செய்தியை சுதந்திரமாக அறிவிக்கமுடியும். பிறருக்குப் பணிசெய்ய நமது நேரம், திறமைகள், மற்றும் வளங்களை விருப்பத்துடன் செய்யும்போது, கடவுளின் அன்பின் தாராள மனப்பான்மையை அது பிரதிபலிக்கும்.

**இந்த மாத்தின் மறைபோதகத்திற்கான நமது கவனம் திருஅவை மூலம் நாம் பெற்றுள்ள பொக்கிஷங்கள், சடங்குகள், மறைபோதகம், சமூகம், மற்றும் நம் வாழ்வில் கிறிஸ்துவின் உடனிருப்பு பற்றிய நமது புரிதலையும், போற்றுதலையும் புதுப்பிக்க நமக்கு இது ஒரு அழைப்பாகும்.** இந்தக் கருத்துகளைப் பற்றிய நமது அறிவை ஆழப்படுத்தி, அவற்றை நமது இதயங்களில் அதை இருத்திக்கொள்வதன்மூலம் மற்றவர்களுடன் மிகவும் நம்பிக்கையுடனும், மகிழ்ச்சியுடனும் பகிர்ந்துகொள்ள முடியும். அவ்வாறு செய்வதன்மூலம் நாம் கடவுளின் அன்பைப் பிரதிபலிக்கிறோம். மேலும் அனைவரையும் மிகப்பெரிய கருவூலமான கிறிஸ்துவில் வாழ்க்கையைக் கண்டறிய அழைக்கிறோம்.

இயேசு கிறிஸ்து தூய ஆவியால் தந்தையினால் அருள்பொழிவு செய்யப்பட்டு, குருவாகவும், இறைவாக்கினராகவும், அரசராகவும் ஏற்படுத்தப்பட்டவர். கடவுளின் அனைத்து மக்களும் கிறிஸ்துவின் இந்த மூன்று பணியிலும் பங்கேற்கிறார்கள். மேலும் அவர்களிடமிருந்து வரும் தூதுரைப்பணியை மற்றும் பொறுப்புகளை சுமக்கிறார்கள்.

கமபோ 783

**இன்றைய இறைவார்த்தை:**

சாலமோனின் ஞானநூல் 18: 6-9

திருப்பாடல்: 33: 1,12,18-20,22

எபிரேயர் 11:1-2, 8-19 (அ) 11:1-2, 8-12

லூக்கா 12: 32-48 (அ) 12: 35-40

INTERNAL CIRCULATION ONLY
BUL 32/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org

# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் 19 ஆம் ஞாயிறு | 10 ஆகஸ்ட் 2025

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**



மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:
சமுதாயம் – இறைவாக்குரைத்தல் காணக்கூடிய ஒத்துழைப்புக்கு அழைப்பு

# நமது நம்பிக்கையை பொக்கிஷமாகக் கருதுதல்

கடவுள் வாக்களித்தவை நிறைவேறுவதைக் காண அவர் உயிருடன் இருக்கமாட்டார் என்று அறிந்திருந்தபோதும், உறுதியாக நம்பிய ஆபிரகாமின் நம்பிக்கையைப் பற்றி இன்றைய வாசகங்கள் நமக்குச் சொல்கின்றன. அவரும் அவர்தம் குடும்பத்தினரும் நாடோடிகளாக வாழ்ந்தபோது அவர்களின் இதயங்கள் உண்மையான தாயகத்தை நோக்கி ஏங்கி இருந்தன. இந்த வழியில் அவர் கடவுளுக்கு உகந்த வாழ்க்கையை நடத்தினார், மேலும் நம்பிக்கைக்காக அவர் பாராட்டப்பட்டார்.